

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பல்லாவரம் மண்டலத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு சிறப்பு முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இதில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், மண்டல குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னாட் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நேற்று (13.02.2025), தமிழ்நாடு அரசு அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கான, 15–வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையானது, குரோம்பேட்டை, மாநகர் போக்குவரத்துக் கழகப் பயிற்சி மைய வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் செயலாளர் எஸ்.கார்மேகம், ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை குழுவின் உறுப்பினர் செயலர் /கூட்டுநர் டாக்டர்.த.பிரபுசங்கர், நிர்வாகத்தரப்பு குழு, துணைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பேரவை / தொழிற்சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவரின் பிறந்தநாள்:

# சிறப்பு வாய்ந்த பெரும் விழாவாக, சாதனைகளின் திருவிழாவாக கொண்டாடப்பட வேண்டும்!

## திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் பிப் 14;-

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள ஆர்.எம்.கெஸ்ட் ஹவுஸில் நடைபெற்றது.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி. தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.




சென்னை மாநகர வாழ்விட மேம்பாட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், தலைமையில் நேற்று (13.02.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், , சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி (திரு.வி.க.நகர்), எஸ்.அரவிந்த் ரமேஷ் (சோழிங்கநல்லூர்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), இ.பரந்தாமன் (எழும்பூர்), மருத்துவர் நா.எழிலன் (ஆயிரம் விளக்கு), ஜெ.கருணாநிதி (தியாகராய நகர்), ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), ஐட்ரீம் இரா. மூர்த்தி (இராயபுரம்), அ.வெற்றி அழகன் (வில்லிவாக்கம்), கே.பி.சங்கர் (திருவொற்றியூர்), எபினேசர்.ஜே.ஜே. (டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்), ஏ.எம்.வி.பிரபாகர ராஜா (விருகம்பாக்கம்), திருவல்லிகேணி காவல் துணை ஆணையாளர் வி.ஜெயசந்திரன், மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் அலுவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரையற்றினார்

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புறாற்றினார் அப்போது பேசியது

சாதனை நாயகர், மக்கள் தலைவர், தமிழ்நாட்டின் உரிமையை மீட்டெடுத்த ஒப்பற்ற அரசியல் தலைவர் - முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாட மிகுந்த ஆர்வத்துடன் கழகத்தினர் தயாராகி வருகின்றனர். அதில், கழகத்தின் முதல் மாவட்டமாக திருவள்ளூர் மத்திய மாவட்டம் களத்தில் இறங்குகிறது என்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா என்றாலே என்னைப் போன்ற நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் கொண்டாட்டம் தான்.



கழகத்தின் தலைமைப் பொறுப்பிற்கு வந்த பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நின்று வென்று திமுகவிற்கு வாகை சூடிய வெற்றி நாயகர் தமிழ்நாட்டின் சிறப்பான சீர்மிகுந்த ஆட்சியை தமிழ்நாட்டில் நடத்திக்கொண்டிருக்கும் கழகத் தலைவரின் பிறந்தநாளை இந்தாண்டு மிகுந்த சிறப்பு வாய்ந்த பெரும் விழாவாக, சாதனைகளின் திருவிழாவாக பொதுமக்களின் நலம் பயக்கும்படி கொண்டாடப்பட வேண்டும்.

திமுகவிற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் பெருமை சேர்க்கும் கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை மக்களின் விழாவாக கொண்டாடு வேண்டும் . கழகத்தின் பெருமையை பறைசாற்றும் வகையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இருக்கும் ஆவடி மாநகரத்தின் 4 பகுதிகள், 3 நகரங்கள், 6 ஒன்றியங்கள், 1 பேரூர் உள்ளிட்ட 14 நிர்வாகங்களுக்கு உட்பட்ட 71 ஊராட்சிகள், 129 வார்டுகள், 642 கிளைகள் என ஒவ்வொரு இடத்திலும் விதிகளுக்குட்பட்டு இரு வண்ண கழகக் கொடிகளை ஏற்றி.

மேலும் மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி, தலைவரின் மகத்தான சாதனைகளை எடுத்துரைப்போம். சமுகத்தின் விளிம்புநிலை நிலையில் உள்ள ஏழை குடும்பத்தினருக்கும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளோருக்கும், மாற்றுதிறனாளிகள், நரிக்குறவர் இன மக்கள் என அனைவருக்கும் அரசி, பருப்பு, புத்தாடைகளை வழங்குவோம். படிக்கும் மாணவ கண்மணிகளுக்குத் தேவையான நோட்டு புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்குவோம். அறுசுவை உணவுகளையும் வழங்கி மக்கள் நாயகரின் பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும். மேலும் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா முன்னிட்டு மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் மாபெரும் பொதுக்கூட்ட நடத்திட வேண்டும்

ஆவடி நடைபெற்ற ஒன்றிய பாஜக அரசு கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டதற்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் அது மட்டுமல்லாமல் கழகத் தலைவர் தளபதி அண்ணன் அவர்கள் இக்கூட்டத்தை பார்த்து என்னை மிகவும் பாராட்டினார் இந்த பாராட்டுக்கு காரணமாக இருந்த திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகளில் அனைவருக்கும் நன்றிகளையும் மற்றும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்

இக்கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மிக விமர்சையாக பொதுக்கூட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி நிகழ்ச்சிகளை கொண்டாடிய ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்களுக்கு நினைவு பரிசாக கை கடிகாரம் வழங்கி பாராட்டினார்

இதில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் ஆர். ஜெயசீலன், சன்.பிரகாஷ், புஜ்ஜி. டி.ராமகிருஷ்ணன், டி.தேசிங்கு ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், என்.இ.கே. மூர்த்தி, தி.வை.ரவி, பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், தி.வே.முனுசாமி, தங்கம் முரளி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஏ.ஜெ.பவுல், ஜி.எஸ்.சங்கீதா, வி.தியாகராஜன், பெ.வினோத், கு.தமிழ்செல்வி, எம்.இளையான், எம்.மோகன், டாக்டர் ராஜேஷ் குமார், ஆதிகேசவன், டி.குமரேசன், சண்முகம், நிஜலிங்கம், விமல் ஆனந்த், ஷாஜகான், எஸ்.சௌந்தர ராஜன், பசீர், குமரேசன், பசுமை ஜாக்கப், வி.ஜெ.உமா மகேஸ்வரன், உள்பட கழக நிர்வாகிகள் அணிகளின் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்கள் .



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி உட்பட்ட திருத்தணி ஒன்றியம் புச்சிரெட்டி பள்ளி ஊராட்சியில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கம் கட்டிடத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் என்,கிருஷ்ணன், நிர்வாகிகள் அசூர்மாணிக்கம், ராமதாஸ், நரசிம்மராஜு, பா. டில்லி பாபு, கமலநாதன்,எம்.ஆர். குப்புசாமி, சீனிவாசன்,குமரவேல், வளர்மதிகுமார், நீலாகோவிந்தசாமி, ஹரிபாபு, கோவேந்தன், பூபாலன்,ரஜினி, விஜய், பள்ளி தலைமை ஆசிரியர், பள்ளி மாணவ மாணவிகள், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.


